தூரம் தான் இருக்கிறது. 5 கிலோ மீட்டர் அளவில் வெட்டினால் அந்த 10 குளங்களுக்கும் தண்ணீர் வர வாய்ப்பாக இருக்கும். அங்கே போதுமான தண்ணீர், மழை பெய்யும்போது அதிகமான தண்ணீர் உபரி தண்ணீர் வருகின்றது. அந்த மாதிரி சமயங்களிலே இந்த குளங்கள் எல்லாம் நிரம்புவதற்கு வாய்ப்பாக இருப்பதனால் இந்த கால்வாயை வெட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து வெட்டிக் கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற இந்த இரட்டைக் குளம் அணைக்கட்டிற்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே ஏற்கனவே இருக்கின்ற பெரிய இரட்டை குளம், சின்ன இரட்டை குளம் மற்றும் இலந்தைக்குளம் ஆகிய குளங்களுக்கு அது போதுமானதாக இல்லை என்ற காரணத்தினாலும், மழை நீர் இருக்கின்ற காலத்திலே இந்த 3 குளங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிற காரணத்தினாலும் மேலும் இதை விரிவு படுத்துகிறபோது மற்ற குளங்களுக்கு போதுமானதாக பாசன வசதிக்காக நீர் வரத்து இருக்காது என்று கருதுகிற சூழ்நிலையில், இந்த கேள்விக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 537, திருமதி அ.தி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை. திரு. பெரியசாமி கேட்கிறார். திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

537—

தாளவாடியில் வணிக வளாகம் கட்டுதல்

*35610—**திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி பகுதியில் வணிக வளாகம் கட்டி வாடகைக்கு விடப்படுமா?

[*1995 மே 3*

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் தொகுதி தாளவாடி பகுதியில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் 22 கடைகளை சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் தொகையில் கட்டி வாடகைக்கு விடுவதற்கான கருத்துருவை தாளவாடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் 3–3–1994 அன்று கோபிசெட்டிபாளையம் கோட்ட வளர்ச்சி அலுவலர் வழியாக மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியிருக்கிறார்கள். கோட்ட வளர்ச்சி அலுவலரும் இக்கருத்துருவினை பரிந்துரை செய்து 24–3–1994ல் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ளார்கள். இக்கருத்துரு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது. மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுக்கு பிறகு இக்கருத்துருவின்மீது விரைவான முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த தாளவாடி மலைப் பகுதி. மைசூர் பகுதியினுடைய பார்டர் பகுதியாகும். இந்தப் பகுதியிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வணிக வளாகம் கட்டவில்லையென்றாலும், அங்கே அதிகமான கடைகளைக் கட்டுவதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சொல்லுகின்றார்கள். அந்தப் பகுதியை முற்பட்ட பகுதியாக மாற்றுவதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் நிறைய வசதிகளை செய்து கொடுத்து இருக்கின்றார்கள். போக்குவரத்து வசதியும் மற்றும் ஏராளமான உதவிகளை அந்தப் பகுதிக்கு செய்து ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கிற அந்தப் பகுதிக்கு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் நல்லபல காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அந்த வளாகத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில், ஆவன செய்வார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் இந்தக் கருத்துரு சம்பந்தமாக கோட்ட வளர்ச்சி அலுவலர் மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்திருக்கிறார். மாவட்ட ஆட்சியர் அதிலே ஒப்புதல் கொடுத்து அரசுக்கு அனுப்பினால்தான் அதிலே முடிவு

1995 மே 3]

எடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, தாளவாடி ஊராட்சி ஒன்றியத்திலே பொது நிதியிலிருந்து இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில் பொது நிதி அதிகமாக இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். இன்றைக்கு சிறு சேமிப்பு ஊக்குவிப்பு தொகையிலே இருந்து மாவட்ட ஆட்சியர் இந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்கு இசைவு அளிப்பார்கள் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அதை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி பகுதி என்பது தாளவாடி ஊராட்சி ஒன்றியத்திற்கே, அந்தப் பகுதி மக்கள் அனைவருக்கும் ஒரு வியாபார ஸ்தலமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகையினால்தான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறு சேமிப்புத் துறையின் மூலமாக பெரியார் மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கின்ற ஊக்கத் தொகையைப் பயன்படுத்தி இந்தக் கட்டிடங்களை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவித்தார்கள். ஆனால், சிறு சேமிப்பினுடைய ஊக்கத் தொகை இந்த மாவட்ட ஆட்சியருக்கு நேரடியாக வராமல் இங்கே இருக்கின்ற அரசின் மூலமாகவே அதை எடுத்துக்கொண்டு, அதற்குரிய பணிகள், உத்தரவு வருவதாக எங்களுக்குத் தகவல் கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு வாய்ப்பு இருப்பதாக அறிவித்தார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த முடிவை, அவர்களுடைய துறை அதிகாரிகளோடு கலந்து நிச்சயமாக இந்த ஆண்டே கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு ஊக்குவிப்பு தொகையைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டிலிருந்து அந்தத் தொகை இங்கு நேரடியாக அரசுக்கு பெறப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் மாவட்ட ஆட்சியரே அந்த சிறு சேமிப்பு ஊக்குவிப்புத் தொகையை அந்தந்த

மாவட்டங்களுக்கு தேவைப்படுகிற வளர்ச்சிப் பணிகளுக்காக பயன்படுத்தி வந்தார்கள். முன்பு ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை இந்த அவையிலே எழுப்பியபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான், நான் ஏற்கெனவே தெரிவித்ததைபோல, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலே நிதி போதுமான அளவு இருக்கும் பட்சத்தில் நிச்சயமாக இந்தக் கருத்துருவை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம், இந்தியத் துணைக் கண்டத்திலே, தமிழகத்தில் தான் முதன் முதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் நீங்கலாக இன்றைக்கு இன்டன்சிபைட் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் என்று சொல்கிற அந்தத் திட்டங்கள் நீங்கலாக இன்றைக்கு அந்த பரவலாக்கப்பட்ட திட்டத்தின் மூலமாக இப்படிப்பட்ட பணிகள் பல்வேறு கிராமப் பகுதிகளிலே எடுக்கப்பட்டு வருகிறது. அதன்மூலமாகவும் இந்தப் பணியை எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதுசம்பந்தமாக அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 538, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

538—

மேல்பட்டியில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி துவங்குதல்

***23824—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, மேல்பட்டியில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி துவங்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,